சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.3/2025

இன்

அசல் வழக்கு எண்.133/2015

....

1) விஜயா

2) மனோஜ்குமார் ... மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள்

/எதிர்/

1) பூங்கோதை

2) தங்கப்பாண்டி மதி ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 13.08.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.சித்தீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் தற்போது தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மிக முக்கியமானதாகவும் மனுதாரர்கள் தரப்பு வழக்கினை நிரூபிக்கக்கூடிய வகையான ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்கள் உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாத காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 8, விதி 1A (3) மற்றும் சிபிசி பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

அசல் வழக்கின் விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி நம்பர் வழக்கில் வழக்கினை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் மிக முக்கியமான ஆவணங்கள் தற்சமயம் தான் கிடைத்ததும் மற்றும் தேடி எடுக்கப்பட்டதாலும் மேற்படி ஆவணங்கள் மனுதாரர்களின் வழக்கினை உரிய முறையில் நிரூபிக்கக் கூடிய ஆவணங்கள் ஆகும். தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் மிக முக்கியமானதாகவும் மனுதாரர்கள் தரப்பு வழக்கினை நிரூபிக்கக்கூடிய வகையான ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்கள் உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாததை, அதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிடவேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்களுக்கு வழக்கினைப் பொறுத்து நிரூபணம் செய்ய இயலாத வகையிலும், ஈடு செய்ய இயலாத வகையிலும் கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் இதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடியதில்லை. எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிடவேண்டும்.

3. **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்கம் -</u>**

மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. மனுவில் குறிப்பட்டுள்ள 4, 5, 8 ஆவணங்களில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் மேற்படி ஆவணங்களில் 4வது ஆவணம் சான்றிட்ட நகலாகவும் 5வது ஆவணம் அசல்/நகல் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. தாவா வழக்கில் 4ம் மனுதாரர் அவரது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி கடந்த 10 வருடங்களாக தாவா அசல் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் தற்போது belated ஆக தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள மேற்படி 3 ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. தாவா மனுவினை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். மனுதாரர்கள் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி ஆவணங்கள் தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு பின்பு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால் அவைகளை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே மனுதாரர்களின் மனுவை

எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

6. மனுதாரர் தரப்பில் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தேடிப்பார்த்து தற்போது தான் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள் முக்கியமான ஆவணங்கள் என்றும், அசல் வழக்கினை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் என்றும், எனவே மேற்படி ஆவணங்கள் உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டது. அதனை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் 4, 5, 8 ஆவணங்களில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் மேற்படி ஆவணங்களில் 4வது ஆவணம் சான்றிட்ட நகலாகவும் 5வது ஆவணம் அசல்/நகல் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல எனவும், அசல் வழக்கானது 10 வருடங்களாக நிலுவையில் உள்ளதாகவும், தற்போது belated ஆக தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள மேற்படி 3 ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும் மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னீடு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

7. அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் தேடி கிடைக்கப்பெற்றதாக கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ள நிலையிலும் அசல் வழக்கின் தீர்வானது இருதரப்பு விசாரணைக்கு பின்பு முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும்

என்பதால் மனுதாரரின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடுவதாக மனுதாரர்கள் தனது மனுவில் தெரிவித்துள்ளார்கள். எனவே மனுதாரர்களின் மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என கருதி மேற்படி மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக தாவா மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு ஆக்ஸ்ட் திங்கள் 21-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.08.21 17:34:29 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள்
தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.08.21 17:34:33 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.03/2025 in
O.S.No.133/2015
**Draft/Fair/Order**
21.08.2025